Registered as a News Paper in Sri Lanka   பக்கங்கள் 04   விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாள் 02   (22 02 1991)   வெள்ளிக்கிழமை   ஓசை 04

## பக்டீரியாக் கிருமிகளினால் தினசரி 40,000 சிறார்கள் மடிவு

(கொழும்பு)

பக்டீரியா நோய்க்கிருமிகளினால் உலகில் தினசரி 40,000 சிறுவர்கள் இறக்கின்றனர் என யுனிசெப் நிர்வாக இயக்குநர் ஜேம்ஸ் கிரான்ட் தெரிவித்துள்ளார். யுனிசெப் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட "உலகச் சிறுவர்களின் நிலை- 1990" என்ற அறிக்கையில் மேற்கண்டவாறு ஜேம்ஸ்கிரான்ட் மேலும் தெரிவித்துள்ளார். வருடாந்தம் ஒருகோடி நாற்பது லட்சம் சிறு (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தில் அடிதடி

# பாதுகாப்பு இல்லை என எதிர்க்கட்சி பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தில் நேற்று இருபது நிமிடங்கள் நடந்த அடிதடி வன்முறையின்போது ஐக்கிய சோசலிஷக் கூட்டணியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்கார அமைச்சர்களினாலும், ஆளும் கட்சி எம். பிகளினாலும் மோசமாகத் தாக்கப்பட்டார். இந்தச் சண்டையைத் தொடர்ந்து தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தும்வரை பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கப்போவதாக எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார்.

இச்சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது; நிலச்சீர்திருத்த மசோதா ஒன்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன் மீதான விவாதம் நடந்து வாக்கெடுப்புக்கு விடப்பட இருந்த நிலையிலேயே உறுப்பினர்களிடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலுக்கு மத்தியிலும் பிரதிச் சபாநாயகர் ஆரியவன்ச ரெக்கவ வாக்கெடுப்பு நடாத்தி மசோதாவை நிறைவேற்றி வைத்துள்ளார்.

தமிழக சட்டசபையில்கூட இவ்வாறு நடந்ததில்லை என்றும் இதுதான் அரசின் வன்முறை என்றும் தாக்குதலுக்கு இலக்கான எம். பி வாசுதேவ நாணயக்காரசெய்தியாளரிடம் கூறினார். வாசுதேவ நாணயக்கார ஒருகட்டத்தில் சபாநாயகரின் இருக்கையில்அமர்ந்ததாகவும், அவரை இழுத்தெடுத்த ஆளும்கட்சி உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் சிலரும் பலமாகத் தாக்கியதாகவும், தற்காத்துக்கொள்ள வாசுதேவ நாணயக்கார கோப்புகளைப் பயன்படுத்தியதாகவும் செய்தியாளர்கள் கூறியுள்ளனர்.

தற்போது வெளிநாடு சென்றுள்ள சபாநாயகர் நாடு (4ஆம் பக்கம் பார்க்க)

## சுக்னா உட்பட 5 அமைச்சர்கள் பதவி இராஜினாமா

(டில்லி)

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வி. சி. சுக்னா உட்பட ஐந்து மத்திய அமைச்சர்களின் இராஜினாமாக் கடிதங்கள் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனால் நேற்று முன்தினம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இவர்கள் தமது பதவி விலகல் குறித்து பிரதமர் சந்திரசேகருக்குத் தெரிவித்ததாகவும், பின்னர் அது நேற்று முன்தினம் பிரதமரின் சிபார்சின்பேரில் ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் வி. சி. சுக்னா உட்பட ஐந்து அமைச்சர்கள் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் சபாநாயகர் ரவிராயினால் பதவி நீக்கம் செய்யப்பட்டது தெரிந்ததே.

## யானை தாக்கி தாயும், பச்சிளம் பாலகியும் மரணம்

(கிளிநொச்சி)

மதம் கொண்ட யானை ஒன்றினால் தாக்கப்பட்ட 9 பிள்ளைகளின் தாய் ஒருவரும், ஒருமாதம்கூட நிரம்பாத பச்சிளம் பாலகி ஒருத்தியும் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமாகினர்

இந்தப் பரிதாப சம்பவம் முல்லைத்தீவு மாவட்டம் முருகண்டிக்கு அண்மையிலுள்ள இந்துபுரம் தேக்கங்காட்டுப் பகுதியில் இடம்பெற்றது.

இதில் மரணமானவர்கள் வெள்ளைச்சாமி தவமணி (வயது 35) என்பவரும் அவரது ஒருமாதம் கூட நிரம்பாத வெ. பத்மாவதி என்னும் பாலகியுமாவர்.

நேற்று முன்தினம் அதிகாலை 3-30 மணியளவில் மதம்கொண்ட யானை ஒன்று இவர்களின் வீட்டைத் தகர்த்தது இதனால் பீதிகொண்ட இந்தக் குடும்பத்தினர் படுக்கையைவிட்டு எழுந்து ஓடியதைக்கண்ட மதம் கொண்ட யானை அவர்களைத் துரத்திப்பிடித்து காலால் மிதித்துக் கொன்றது. (49)

## பாடசாலைகளின் சேதங்களை திருத்தியமைக்க அனுமதியில்லை

(யாழ்ப்பாணம்)

- சுந்தரலிங்கம்

"சிறிலங்கா இராணுவ வான் படைகளின் தாக்குதலினால் சேதமாக்கப்படும் பாடசாலைகளின் சேதவிபரங்களைக் கொண்ட மாதாந்த அறிக்கைகளை கல்வி அமைச்சுக்கு அனுப்பி வருகின்றேன். எனினும் சேதமாக்கப்பட்ட பாடசாலைகளைத் திருத்தி அமைப்பதற்கு இதுவரை எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை" இவ்வாறு யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இராணுவ மற்றும் வான் தாக்குதல்களினால் பாடசாலைகள் தொடர்ந்தும் சேதமடைந்து வருவதனால் உடனடியாக சேதவிபரங்களைச் சமர்ப்பிப்பதைவிட மாதாந்த அடிப்படையில் சேதவிபரங்களை சேகரித்து அறிக்கைகளை அனுப்பி வைப்பது எமக்கு வசதியாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஈ)

## அன்னையர் போராட்டத்தை புலிகள் ஆதரிக்கின்றனர்

## வீரவணக்கம்

### தர்சன்

(கட்டுவன்)

கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடன்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதல் ஒன்றில் தர்சன (ஆண்டி ஜீவா - பெரியகடை திருக்கோணமலை) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார் இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்

## மேலும் ஒருபகுதி பாடநூல் வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மாணவர்களுக்கான மற்றுமொரு பகுதி இலவச பாடநூல்கள் நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தன. கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளது (ஈ)

## ஓரி கடித்து சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

## சதாம் ஹுசைன் நகரில் மூன்று தமிழர் படுகொலை

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூருக்கு சமீபமாகவுள்ள சதாம் ஹுசைன் நகருக்கு ஊடாகச்சென்ற பயணிகள் போக்குவரத்து பஸ்வண்டி ஒன்று முஸ்லிம்களால் நேற்று வழிமறிக்கப்பட்டு இந்த பஸ் வண்டியின் ஓட்டுநர் வெட்டிக் கொலைப்பட்டதுடன் மேலும் இரு தமிழர்கள் உயிரோடு பஸ்ஸுடன் தீமூட்டி எரித்துக் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் மேலும் பல தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

## மட்டக்களப்பு பாடசாலைகளில் 26 வீதம் இராணுவத்திடம்

(மட்டக்களப்பு)

"சிறிலங்கா இராணுவ, வான் படைகளின் தாக்குதலினால் சேதமாக்கப்படும் பாடசாலைகளின் சேதவிபரங்களைக் கொண்ட மாதாந்த அறிக்கைகளை கல்வி அமைச்சுக்கு அனுப்பி வருகின்றேன். எனினும் சேதமாக்கப்பட்ட பாடசாலைகளைத் திருத்தி அமைப்பதற்கு இதுவரை எமக்கு எதுவும் வழங்கப்படவில்லை" இவ்வாறு யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

- சுந்தரலிங்கம்

இராணுவ மற்றும் வான் தாக்குதல்களினால் பாடசாலைகள் தொடர்ந்தும் சேதமடைந்து வருவதனால் உடனுக்குடன் சேதவிபரங்களைச் சமர்ப்பிப்பதைவிட மாதாந்த அடிப்படையில் சேதவிபரங்களை சேகரித்து அறிக்கைகளை அனுப்பி வைப்பது எமக்கு வசதியாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க)

## அன்னையர் போராட்டத்தை புலிகள் ஆதரிக்கின்றனர்

: சிறிமாவோ

(கொழும்பு)

"அன்னையர் முன்னணியையும், அவர்களது போராட்டத்தையும் தமிழீழ விடுதலை புலிகள் ஆதரிக்கின்றனர்" என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நுகேகொடையில் நடைபெற்ற அன்னையர் முன்னணிக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய சிறிமாவோ இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் லண்டன் காரியாலயத்தில் இருந்து விடுத்த அறிக்கை ஒன்றில் இலங்கையின் அன்னையர் முன்னணிக்கு ஆதரவளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## உற்பத்திப் பெருக்கம் இன்றி சம்பளம் உயர்த்த முடியாது

: ரஞ்சன்

(கொழும்பு)

"உற்பத்திப் பெருக்கத்திற்கு ஏற்பவே சம்பளத்தை உயர்த்த முடியும் உற்பத்தியின்றி சம்பளத்தை மாத்திரம் உயர்த்த முடியாது" என்று சிறிலங்காவின் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன குறிப்பிட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற "இலங்கையின் சமூகபொருளாதார முன்னேற்றமும் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு பேசும்போது ரஞ்சன் விஜேரட்ன இவ்வாறு தெரிவித்தார்.

பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்வாறு சம்பளம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாடநூல் வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மாணவர்களுக்கான மற்றுமொரு பகுதி இலவச பாடநூல்கள் நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளது (க)

## கீரி கடித்து சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

கைதடியில் கீரியினால் கடியுண்ட சிறுமி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

கடந்த மாதம் 13ஆம் திகதி வீட்டினுள் புகுந்த கீரியொன்று க. சஜந்தா (வயது 6) என்ற சிறுமியை கடித்தது. இச்சிறுமிக்கு போதிய மருத்துவ சிகிச்சை அளிக்கத் தவறியதனால் இவர் நேற்று மரணமடைந்துள்ளார். (க)

## 4 மாதங்களாக முத்திரை அனுப்பவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு கடந்த நான்கு மாதங்களாக தபால் முத்திரைகள் எதுவும் தபால் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்படவில்லை.

இதனால் இப்பகுதி மக்கள் தபால் தொடர்பு மற்றும் அலுவலக பாவனைக்கு முத்திரைகளை பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்குவதுடன் கறுப்புச் சந்தையில் முத்திரைகளுக்கு அதிகமாக பணம் செலுத்தவேண்டியுள்ளது. (க)

...துள்ளார்.

தமிழக சட்டசபையில் கூட இவ்வாறு நடந்ததில்லை என்றும் இதுதான் அரசியல் வன்முறை என்றும் தாக்குதலுக்கு இலக்கான எம்.பி வாசுதேவ நாணயக்கார செய்தியாளரிடம் கூறினார். வாசுதேவ நாண...

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூருக்கு சமீபமாகவுள்ள சதாம் ஹுசைன் நகருக்கு ஊடாகச்சென்ற பயணிகள் போக்குவரத்து பஸ் வண்டி ஒன்று முஸ்லிம்களால் நேற்று வழிமறிக்கப்பட்டு இந்த பஸ் வண்டியின் ஓட்டுநர் வெட்டிக் கொலைப்பட்டதுடன் மேலும் இரு தமிழர்கள் உயிரோடு பஸ்ஸுடன் தீமூட்டி எரித்துக் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் மேலும் பல தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

## மட்டக்களப்பு பாடசாலைகளில் 26 வீதம் இராணுவத்திடம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைக் கட்டடங்களில் சுமார் 26 சதவீதமானவை இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. சுமார் ஆயிரம் ஆசிரியர்களின் இடம் நிரப்பப்படாமல் பற்றாக் குறையாக உள்ளது. பல பாடசாலைக்கு நிரந்தரமான அதிபர்கள் கூடக் கிடையாது: விஞ்ஞான பாடங்கள் போதிக்கப்படும் பதினொரு பாடசாலைகளில் ஆய்வுகூட வசதிகளோ விஞ்ஞான உபகரணங்களோ இல்லை எனத் தெரியவந்துள்ளது:

அத்துடன் தினசரி அறுநூறுக்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்காக நாடும் 22 வார்டுகளும் 618 கட்டில்களையும் கொண்ட மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலையில் ஒரேயொரு விசேட வைத்தியரும், ஒரேயொரு மகப்பேறு மருத்துவரும் ஒரேயொரு பல் வைத்திய நிபுணரும் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர் எனவும் தெரிய வருகிறது.

### கீழ்த்தரமான 'ராக்கிங்' தொடர்பாக

## கொழும்பு பல்கலை. மாணவர் பொலிஸாரினால் கைது

(கொழும்பு)

கீழ்த்தரமான, மனிதாபிமானமற்றமுறையில் "ராக்கிங்" நடவடிக்கையில் ஈடுபட்டதற்காகக் கொழும்பு பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்கள் பலரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

புதிதாக அனுமதி பெற்ற பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர்கள் இந்த இழிவு நிலை குறித்து முறைப்பாடுகள் செய்ததைத் தொடர்ந்து இறுதியாண்டு மாணவர்களை கைதுசெய்யும் நடவடிக்கை ஆரம்பித்ததாகக் கொழும்புப் பொலிஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஏற்கனவே ஆரம்ப ஆண்டு மாணவர்களின் பெற்றோர்கள் கொழும்புப் பல்கலைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதிய வவுச்சர்களை யாழ். தயாரிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஓய்வூதியகாரர்களுக்கான கொடுப்பனவுகளை கால தாமதமின்றி மேற்கொள்வதற்கு வசதியாக ஓய்வூதிய வவுச்சர்களை யாழ்ப்பாணத்திலேயே தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் கம்பியூட்டர் பிரிவு இவ்வவுச்சர்களைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. இவ்வாண்டு இறுதியளவில் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான வவுச்சர்களைத் தயாரித்துக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் மேற்படி வவுச்சர்கள் கொழும்பிலேயே தயாரித்து இங்கு எடுத்துவரப்படுவதால் ஓய்வூதியகாரர்களின் கொடுப்பனவுகளுக்கு பல மாதங்கள் கால தாமதம் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

வரி விளம்பரம்

### தோத்திரத் திரட்டு

சைவத் திருநெறித் தோத்திரத் திரட்டு. (அகத்தியர் தேவாரத்திரட்டு, உமாபதிசிவாச்சாரியார் அருள் முறைத் திரட்டு உட்படப் பன்னிரு திருமுறைகளும் திருப்புகழ்ப் பாடல்களும் அடங்கியது) தொகுப்பு: க. சி. குலரத்தினம் விலை ரூபா 25/- வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(B2028)

### புலமைப் பரிசில் பரீட்சை

மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாவிடை வகுப்புகள் நடைபெறவுள்ளன. ஆரம்பம்: 23 02.91 சனி காலை 10.30 மணிக்கு.

புதிய ஆண்டு 5க்கான காலை மாலைபுலமைப்பரிசில் வகுப்புக்களும் ஆண்டு4தொடக்கம் 11வரையான வகுப்புக்களுக்கான சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (R-1127)

### விற்பனைக்கு

இயற்கைச் சாதனம் கொண்டு தயார் செய்த நீம் தூபம் இல்லங்களில் புகைத்து சுகவாழ்வு பெறுங்கள். பக்கெற் விலை ரூபா 1 50- இணுவில், திருநெல்வேலி, யாழ்நகர், அண்ணா கோப்பிக் கடையிலும் விற்கப்படுகிறது. மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

(B-2051)

### திரவசவர்க்காரம்

துரிதமான சிக்கன சலவைக்குத் மில்க்வைற் திரவ சவர்க்காரம் விளக்கெண்ணெய் வேப்பெண்ணெய். மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத்திலும் விற்பனையாகிறது. (B-2052)


## இன்ராறக்ட் பயிற்சி முகாம்

யாழ். றோட்டறிக் கழகம் மற்றும் இன்ராறக்ட் உறுப்பினர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி முகாம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

பரியோவான் கல்லூரி, சம்பத்திரிசியார் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, கனகரட்னம் மத்திய மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம், உடுவில் மகளிர் பாடசாலை, இந்து மகளிர் கல்லூரி, மகாஜனாக்கல்லூரி. யாழ். இந்துக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகிய 12 பாடசாலைகளைச் சேர்ந்த இன்ராறக்ட் உறுப்பினர்கள் இந்த மூழு நாள் பயிற்சி முகாமில் கலந்து கொள்கின்றனர்.

சர்வதேசப் புரிந்துணர்வு சமூக சேவை, கழகச் சேவை, நிதி என்பன குறித்த குழு மட்டத்திலான கலந்துரையாடல்களும் பயிற்சி முகாமில் இடம் பெறும்.

## ஜெயலலிதாவிடம் அ. தி. மு. க தலைமையகம்

(சென்னை)

சென்னையிலுள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையலுவலகம் அக்கட்சியின் பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவிடம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. இக்கட்டடத்தின் மீதான முழு உரிமையும் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. வினருக்கே உண்டு என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்து உள்ளது.

# மருத்துவ வசதிகளின்றி காசநோயாளர் பாதிப்பு

(செ. ஜ. மை.)

வாதரவத்தை, சிற்றூரவைப் பகுதியில் காசநோயால் 19 பேருக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 5 பேர் வரை மரணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் சிறுவர்கள் தொடக்கம் வயோதிபர்கள் வரை இந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நேரம் இந்த நோய்க்கு சிகிச்சை அளிக்கும் மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலை சிறிலங்கா இராணுவ நடவடிக்கையினால் கடந்த 9 மாதங்களாக இயங்கமுடியாதிருக்கிறது.

இதனாலும் இந்த வைத்தியசாலையை யாழ் குடாநாட்டில் பாதுகாப்பான ஒரு பகுதியில் இயங்க வைக்க வைத்திய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமலிருப்பதாலும் காசநோய் சகல பகுதிகளிலும் பரவும் அபாயநிலை ஏற்படும் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### வீதிவேலைப் பொருள்களுக்கான கூறுவிலை அறிவித்தல் - 1991

வீதிவேலைப் பொருள்களுக்கான கேள்விப் படிவங்களை வழங்கும் தினமும் ஏற்றுக் கொள்ளும் தினமும் கீழ்க்கண்டவாறு நீடிக்கப் பட்டுள்ளன.

1. கேள்விப்படிவங்களை வழங்கும் திகதி - 27.02.91 - நண்பகல் 12.00 மணிவரை
2. கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி - 01.03.91 - நண்பகல் 12.0 மணிவரை

வி. பி. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்
எமது இல: வே. ப. 1/91

மாநகரஅலுவலகம்
யாழ்ப்பாணம். 18.02.1991
B/2053

## 6 ஆம் மாத நினைவாஞ்சலி



தாயின் மடியில்
28 - 03 - 1975

தாயக மீட்பில்
22 - 08 - 1990

ஊர்காவற்றுறையில இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த

இளம்புலி

**பாபுஜீ**

(ஐயாத்துரை அருள்செல்வன்)

தமிழீழ தாயகத்தை மீட்டெடுக்க
தளம் அமைத்துப்போராடும்
புலிப்படையின் அங்கமாய்ப் போனாயே
'ராஜாக்கள்'
புரியாத வயதினிலே களம் கண்ட வீரனே
உன்மரணத்தினால் கூட உனது
இலட்சியக் கனவை அழிக்க முடியாது!
மறக்க முடியாது உன் தியாகம்
மலருமடா தமிழீழம்!

உன் நினைவால் துயருறும்

சந்தைவீதி,
காங்கேசன்துறை.

குடும்பத்தினர்
(R-1121)

## முதலாண்டை நிறைத்து இரண்டாம் அகவையில் கால்பதிக்கும்

பெறுங்கள் ...
ரூபா 1 50- இனுவில், திரு நெல்வேலி, யாழ் நகர், அண்ணா கோப்பிக் கடை-வி லும் விற்கப்படுகிறது. மில்க் வைற் - யாழ்ப்பாணம்.
(B-2051)

## திரவசவர்க்காரம்

துரிதமான சிக்கன சல வைக்குத் மில்க்வைற் திரவ சவர்க்காரம் விளக்கெண்ணெய் வேப்பெண்ணெய். மாளிப் பாய் ப.நோ.கூ. சங்கத்திலும் விற்பனையாகிறது. (B-2052)

முன்னேற்றக் கழகத்தின் தலைமையலுவலகம் அக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவிடம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன் றம் ஆணையிட்டுள்ளது. இக் கட்டடத்தின் மீதான முழு உரிமையும் செல்வி ஜெய லலிதா தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. வினருக்கே உண்டு என்று உச்ச நீதிமன் றம் தீர்ப்பு அளித்து உள்ளது.

மாநகரஅலுவலகம்,
யாழ்ப்பாணம், 18.02.1991
B/2053

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்
எமது இல: வே. ப. 1/91

...
இலட்சியக் கனவை அழிக்க முடியாது!
மறக்க முடியாது உன் தியாகம்
மலருமடா தமிழீழம்!
உன் நினைவால் துயருறும்

குடும்பத்தினர் -
சந்தைவீதி,
காங்கேசன்துறை.
(R-1121)


முதலாண்டை நிறைவு செய்த
ஈழநாதத்திற்கு எமது நல் வாழ்த்துக்கள்!

DHL
WORLDWIDE EXPRESS

வெளிநாட்டுக் கடிதங்கள்
உடனுக்குடன்
சம்பந்தப்பட்ட நாடுகளிலேயே
தபாலில் சேர்க்கப்படும்
விபரங்களுக்கு
Cosmos Marketing Services
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(B/1940)



முதலாண்டை நிறைத்து
இரண்டாம் அகவையில்
கால்பதிக்கும்
"ஈழநாதம்"
மக்கள் தினசரி
தொடர்ந்தும் நற்பணி புரிய
வாழ்த்துகின்றோம்!

வடஈழம்
சிகை அலங்கரிப்பாளர் சங்கம்.
(B-2049)






பெப்ரவரி 22

1986ஆம் ஆண்டு மன்னார் கச்சேரிக்கு முன்பாக
இராணுவத்தினரின் திடீர்த் தாக்குதலினால்
வீரமரணமடைந்த

லெப். சிறீநாத் (வி. தயாநிதி - மன்னார்)
வினோத் (குலம் மைக்கல்துலாஸ் - வங்காலை)

1988ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
தவம் (ஞா. தவராசா - வந்தாறுமூலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு
கூருகின்றோம்.

தடைகளை உடைத்தனர்
படையாகி உயர்ந்தனர்
தமிழினம் விழித்திட
வழியுமே சமைத்தனர்!

பொன் தமிழீழத்தை
பெற்றிடப் பொருதியே
எதிரியின் முகாமையே
எரித்திவர் அழித்தனர்!
வேள்வியில் வீரமாய்
மரணமும் உற்றனர்
பெருமை கொள் மாவீரர்
பெயருமே பெறுகிறார்!

– விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி
(B-2057)



வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
கல்வியாண்டு 1991/92

இலங்கைப் பல்கலைக்கழகங்களின்
பட்டப் பாடநெறிகளான
* கலைமாணி B. A.
* விஞ்ஞானமாணி B. Sc.
* வணிகமாணி B. Com.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்
விண்ணப்பிக்கலாம்.

விபரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும்
ரூபா 10/- செலுத்தி
நேரில் பெற்றுக்கொள்ளலாம்;

விண்ணப்ப முடிவுத் திகதி: 31 . 03 . 1991

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

உதவிப் பதிவாளர்:
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(B- 2043)



KALALAYAAH
கலாலயா

தமிழீழ விடுதலைக்கான பணியில்
1ஆம் ஆண்டை நிறைவு செய்துள்ள ஈழநாதம்
தொடர்ந்தும் விடுதலைக்கான பணியை ஆற்ற
வாழ்த்துகின்றோம்.

★ ★ ★

யாழ். நகரில் இசை, நடன மற்றும் டிப்ளோமா
மனைப் பொருளியல் வகுப்புகளுக்கு
பெயர் பெற்ற ஓரே கலைக்கல்லூரி
கலாலயாவேயாகும்.

கலாலயா
விக்டோறியா வீதி,
யாழ்ப்பாணம்.
(B-2061)

## ❋ சிந்தனைக்கு ❋

இடித்தவள், புடைத்தவள் இங்கேயிருக்க,
எட்டிப்பார்த்தவன் கொட்டிக்கொண்டுபோனானாம்

— தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 22-02-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 028-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண். 03

# முன்னாள் தோட்ட துரை ரஞ்சன் விஜேரெட்ண

"உற்பத்திப் பெருக்கத்திற்கு ஏற்பவே சம்பளத்தை உயர்த்த முடியும். உற்பத்தியின்றி சம்பளத்தை உயர்த்த முடியாது அப்படி உயர்த்துவது தங்க முட்டையிடும் வாத்தை அறுத்து முட்டையை அபகரிக்கும் செயலுக்கு ஒப்பானதாகும்" என பெருந்தோட்டத்துறை அமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜேரட்ண தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமூக பொருளாதார முன்னேற்றமும், தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினைகளும் என்ற தலைப்பிலான கருத்தரங்கிலே அமைச்சர் ரஞ்சன் இவ்வாறு தெரிவித்திருந்தார். அண்மைக்காலத்தில், பெருந்தோட்டத்துறையில் சம்பள உயர்வு கோரி மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டங்களுக்குப் பதிலாகவே அமைச்சர் ரஞ்சனின் கூற்று அமைந்துள்ளது.

ரஞ்சனின் இந்த கூற்றின்படி பெருந்தோட்டத்துறை தங்க முட்டையிடும் வாத்தாக இருந்து இறக்கின்றது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை மட்டுமே தட்டிக் கழித்துள்ளார். அதேவேளை முன்னாள் தோட்டத் துரை ஒருவரிடம் இருந்து இவ்வாறான பதில் வருவது ஆச்சரியப்படக்கூடிய விடயமும் அல்ல.

அமைச்சர் ரஞ்சனின் கூற்றுப்படி பெருந்தோட்டத் துறையின் உற்பத்தி அதிகரித்தால் மட்டுமே தொழிலாளர்களின் சம்பளம் உயர்த்தப்படும் என்பதாகும். இதன்மூலம் பெருந் தோட்டத் துறையின் உற்பத்தி வீழ்ச்சிக்கு தொழிலாளரே காரணம் என்பது போலாகின்றது. ஆனால், இன்று அரசாங்கம் கடைப்பிடிக்கும் பெருந்தோட்டத்துறை தொடர்பான கொள்கை எதுவும் பெருந்தோட்டத்துறையின் உற்பத்தி உயர்வுக்கும், வருமான அதிகரிப்பிற்கும் வழிவகுப்பதாக இல்லை.

# சாண எரிவாயு பயன்பாடு

எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவும் இன்றைய காலகட்டத்தில் எமது அன்றாட வேலைத்திட்டங்களுக்கு அவசியமான சக்தியைப் பல்வேறு மூலங்களிலும் இருந்து பெற முயற்சிக்க வேண்டும் நமக்குத் தேவையானவற்றை நாமே கண்டறிந்து தன்னிறைவு கொள்ள எத்தனிக்க வேண்டும்.

அவ்வாறான முயற்சியின் ஒன்றுதான் சாணத்திலிருந்து சக்தி பெறுவது.

மிருகக் கழிவான சாணத்தில் நொதிப்பு ஏற்படுவதன் காரணமாக மெதேன் என்ற வாயு உருவாகின்றது. இது தான் சாண எரிவாயு.

எமது விவசாய முயற்சிகளில் பயிர்ச் செய்கையையும், மிருக வளர்ப்பையும் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் போது எமது பண்ணை முயற்சிகளுக்கு வேண்டிய வலுவையும் மிருக உற்பத்திப் பொருள்களையும் பெறக்கூடியதாக இருப்பதோடு, எமது அன்றாட வீட்டுத் தேவைக்கு அவசியமான சக்தியையும் சாண எரிவாயுவின் உதவியால் பெறலாம்.

**சாண எரிவாயு**

சாணம் நொதிப்பதனால் அல்லது புளிப்பதனால் ஏற்படும் வாயுதான் சாண எரிவாயு. இது "மெதேன்" என்ற பெயருடையது. எரியும் தன்மை மிக்கது

எங்களிடம் உள்ள கால்நடைகளின் அளவிற்கேற்ப சாண எரிவாயுத் தொட்டிகளை அமைக்கலாம்.

பகல் வேளையில் எந்நேரமும் சூரிய ஒளிபடும் இடங்களில், கால்நடை வதிவிடத்திற்கு அண்மையில் குடிநீர் கிணற்றிலிருந்து 10 மீற்றர் தொலைவில் வீட்டுச் சுவருக்கு ஒரு மீற்றர் தள்ளி இத்தொட்டிகள் அமைக்கப்பட வேண்டும். தொட்டியின் அளவு, அமைப்பு என்பன கால்நடைகளின் அளவிற்கேற்ப செய்யப்படும்.

மாட்டுக் கழிவு, கோழிக் கழிவு, பன்றிக் கழிவு, ஏன் மனிதக்கழிவுகளிலிருந்தும்கூட எரிவாயுவைப் பெறலாம். அத்துடன் வைக்கோல், புல், சல்பீனியா, ஆகாயத்தாமரை இலைகள் என்பனவற்றையும் பயன்படுத்தலாம். பின் இவை நிலத்திற்குப் பசளையாகவும் பயன்படுகின்றன.

## சாண எரிவாயுவின் பயன்கள்

**மின்சாரம்**

சாண எரிவாயுவினால் ஏற்படும் சக்தியினால் மின்னியக்க சாதனங்களை இயக்கி மின்சாரம் பெறலாம்.

ஒரு மீற்றர் கனவளவுடைய எரிவாயுவைக் கொண்டு 1.25 கிலோ வாற் மின்னைப் பெறலாம். ஒரு மீற்றர் கனவளவுடைய எரிவாயு தயாரிக்க 20-25 கிலோ வரையான சாணம் போதுமானது. இவ்வாறு பெறப்படும் மின் மூலம் 60-100 வாற் மின் விளக்கு ஒன்றை 6 மணி நேரம் ஒளிரச் செய்யலாம். குளிரூட்டிகளைப் பாவிக்கலாம்.

**எரிபொருள்:**

ஒரு கன மீற்றர் எரிவாயு 0.7 லீற்றர் பெற்றோலிற்கு சமனானது. இதனைக் கொண்டு 3 தொன் நிறை கொண்ட லொறியை 2.8 கிலோ மீற்றர்கள் தூரம் ஓட்டலாம் ஒரு குதிரைவலுச் சக்தியுடைய இயந்திரங்களை இரண்டு மணி நேரத்திற்கு இயக்கலாம்.

விறகுத் தட்டுப் பாடான இடங்களில் எரிபொருளாகவும் உபயோகிக்கலாம்.

இவை போன்ற மின் சக்தியால்லா இயந்திரங்களாலோ இயங்குபவற்றை குறைந்த செலவில் சாண எரிவாயு மூலம் இயக்கலாம்

இது நிச்சயமான உண்மை; சீனாவில் எழுபது லட்சம் சாண எரிவாயுக் கிடங்குகள் உள்ளன. அவற்றின் மூலமே அங்கு தேவைகள் பூர்த்தியாக்கப் படுகின்றன. இ-த் துக்கிடம் 100 கன மீற்றர் அளவு கிடங்குகள் கூட அமைக்கப்பட்டு எரிவாயு பெறப்படுகின்றது; பயனடைகின்றது; ஏன் எங்கள் கால்நடைகளின் கழிவுகளைக் கொண்டு இதே மாதிரியான பெரும் பயனைப் பெற முடியாது?

- தமிழீழ ஆய்வு நிறுவனம்.

## கடை உடைத்து திருட்டு

(செ. த. மை)

மானிப்பாய் மருதடி வீதியிலிருக்கும் சி. செல்வரத்தினம் என்பவருக்குச் சொந்தமான பலசரக்குக்கடை உடைக்கப்பட்டு 3 பெட்டி பிஸ்கட்டுகள் இனிப்புவகைகள், 600 ரூபா ரொக்கப்பணம் ஆகியன திருடப்பட்டுள்ளன. கடந்த 17-ம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து பிரதேச பொறு

## டாக்டர்கள் அக்கறையீனத்தால் நோயாளர்கள் பெரும் அவதி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மாவட்ட ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் தொடர்ந்து விடுமுறையில் நிற்பதால் நோயாளர்கள் மிகுந்த கஷ்டம் அடைய வேண்டியுள்ளது. மேற்படி வைத்தியசாலையில் ஒரு மாவட்ட அதிகாரியும், இரு வைத்திய அதி

காலமாக மாவட்ட வைத்திய அதிகாரியும், ஓர் உதவி வைத்திய அதிகாரியும் வைத்தியசாலைக்கு சமுகமளிக்காமல் மர்மமாக மறைந்துவிட்டனர் இங்கு ஒரேயொரு உதவிவைத்திய அதிகாரிதான் தற்போது பல நோயாளர்களைப் பார்

என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை மட்டுமே தட்டிக் கழித்துள்ளார். அதேவேளை முன்னாள் தோட்டத்துரை ஒருவரிடம் இருந்து இவ்வாறான பதில் வருவது ஆச்சரியப்படக்கூடிய விடயமும் அல்ல.

அமைச்சர் ரஞ்சனின் கூற்றுப்படி பெருந்தோட்டத் துறையின் உற்பத்தி அதிகரித்தால் மட்டுமே தொழிலாளர்களின் சம்பளம் உயர்த்தப்படும் என்பதாகும். இதன்மூலம் பெருந் தோட்டத் துறையின் உற்பத்தி வீழ்ச்சிக்கு தொழிலாளரே காரணம் என்பது போலாகின்றது. ஆனால், இன்று அரசாங்கம் கடைப்பிடிக்கும் பெருந் தோட்டத்துறை தொடர்பான கொள்கை எதுவும் பெருந் தோட்டத்துறையின் உற்பத்தி உயர்வுக்கும், வருமான அதிகரிப்பிற்கும் வழிவகுப்பதாக இல்லை.

சிறிலங்கா அரசாங்கம் இனவாத அடிப்படையில் செயற்படுவதனால் மலையகத்தோட்டங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுவி வருகின்றது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் தோட்டக்காணிகள் பங்கீடு செய்யப்பட்டு சிங்களவருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இதனால் தோட்டங்களின் உற்பத்திகள் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளன.

மேலும், தோட்டங்களில் அளவற்ற சிங்களவருக்கு பெருமளவில் வேலைவாய்ப்புக்களை அரசாங்கம் திட்டமிட்டு வழங்கி வருவதனால் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மேலும், கடந்த வருடங்களில் அரசாங்கத்தின் ஜே. வீ. பியினரின் செயற்பாடுகளினால் பெருந்தோட்ட வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்டன. தற்பொழுது வளைகுடாப் பிரச்சினையும் பெருந்தோட்டத்துறையைப் பெருமளவு பாதித்துள்ளது.

இதிலிருந்து பெருந்தோட்டத்துறையின் உற்பத்தி வீழ்ச்சிக்கு தோட்டத் தொழிலாளர்கள் எந்தவிதத்திலும் காரணமாகவில்லை என்பது தெரிகின்றது. பெரும்பாலும் அரசாங்கத்தின் கொள்கையே இதற்குக் காரணமாக அமைந்தன. மேலும், பெருந் தோட்டத்துறையின் உற்பத்தியில் வீழ்ச்சியை ஏற்படுத்துவதற்கு எழுபதுகளில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மேற்கொண்ட காணிச் சீர்திருத்தங்களும் காரணமாக அமைந்தன.

இந்நிலையில், பெருந்தோட்டத்துறையின் உற்பத்தி அதிகரித்தால்தான் சம்பளம் உயர்த்தப்படும் என்ற அமைச்சர் ரஞ்சனின் கூற்று தோட்டத் தொழிலாளியின் கோரிக்கையைத் தட்டிக்கழிப்பதற்கான ஒரு காரணமே ஒழிய வேறெதுவும் இல்லை. இது தோட்டத்தொழிலாளர் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் கடைப்பிடித்துவரும் மாற்றாந்தாய் மனப்பான்மையின் வெளிப்பாடு.

பிரித்தானியர் காலத்தில் இருந்து பொன் முட்டையிடும் வாத்தாக இருந்துவந்த பெருந்தோட்டத்துறையை இனவாத நோக்கில் கொல்ல முற்பட்டவர்கள் சிறிலங்கா அரசியல்வாதிகளே ஒழிய தோட்டத் தொழிலாளர்கள் அல்ல. தற்பொழுது தோட்டத் தொழில்துறையை சீரழிப்பதற்கு நடவடிக்கையை எடுத்துக்கொண்டு மறுவழத்தில் உற்பத்தியை அதிகரிப்பதைப் பற்றிப் பேசுவது என்பது தற்பொழுது வடக்குகிழக்கின் அபிவிருத்தியைப் பற்றிச் சிறிலங்கா அரசாங்கம் பேசுவதற்கு ஒப்பானதே.

---

## கடை உடைத்து திருட்டு

(செ. த. மை)

மானிப்பாய் மருதடி வீதியிலிருக்கும் சி. செல்வரத்தினம் என்பவருக்குச் சொந்தமான பலசரக்குக்கடை உடைக்கப்பட்டு 3 பெட்டி பிஸ்கட்டுகள், இனிப்புவகைகள், 600 ரூபா ரொக்கப்பணம் ஆகியன திருடப்பட்டுள்ளன. கடந்த 17-ம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து பிரதேச பொறுப்பாளருக்கு முறையிடப்பட்டுள்ளது.

## டாக்டர்கள் அக்கறையீனத்தால் நோயாளர்கள் பெரும் அவதி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மாவட்ட ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் தொடர்ந்து விடுமுறையில் நிற்பதால் நோயாளர்கள் மிகுந்த கஷ்டம் அடைய வேண்டியுள்ளது. மேற்படி வைத்தியசாலையில் ஒரு மாவட்ட அதிகாரியும், இரு வைத்திய அதிகாரிகளும் கடமையாற்றி வந்தனர். கடந்த பல மாதகாலமாக மாவட்ட வைத்திய அதிகாரியும், ஓர் உதவி வைத்திய அதிகாரியும் வைத்தியசாலைக்கு சமுகமளிக்காமல் மர்மமாக மறைந்துவிட்டனர் இங்கு ஒரேயொரு உதவிவைத்திய அதிகாரிதான் தற்போது பல நோயாளர்களைப் பார்வையிட்டு வருகிறார். அவரும் விடுமுறையில் சென்றால் ஆஸ்பத்திரியை மூடவேண்டிய நிலையேற்படுகிறது. இதே போன்ற நிலை வேலணை கிராமிய ஆஸ்பத்திரியிலும் நிலவுகிறது. இங்குள்ள ஒரேயொரு உதவி வைத்தியரும் விடுமுறையில்சென்றால் இந்த ஆஸ்பத்திரியும் செயலிழந்த நிலையில் இருக்கும். (15)

## மக்களிடம் டீசல் பெறுவதற்கு செஞ்சிலுவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலைகளிற்கு பொதுமக்களைக் கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ்வண்டிக்குரிய டீசலைப் பொது மக்களிடம் இருந்தே பெறுவதை யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தலைவர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோர், அவசர நோயாளர் ஆகியோரை ஏற்றிச் செல்வதற்காக செஞ்சிலுவைச் சங்கத்தினால் டீசல் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது எனத் தெரிவித்த அவர் சில வேளைகளில் ஒரு சிலரினால் இச் சந்தர்ப்பம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருவது வேதனைக்குரியது எனவும் குறிப்பிட்டார்.

## சுகாதார வைத்திய அதிகாரியாக புதியவர் நியமனமாகலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரியாக புதிய ஒருவர் மாற்றம் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

இப்பொழுது யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராக கடமையாற்றும் வைத்திய கலாநிதி தேய்வேந்திரன் அவர்களே விரைவில் மாநகரசபைக்கு கடமையாற்ற இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (லோ)

## தாமதிக்காது அனுப்பிவைக்கவும்

(யாழ்ப்பாணம்)

கனிஷ்ட தொழினுட்ப சான்றிதழ் பரீட்சைக்கான பாடநெறிப் பட்டியலை ஆண்டு 9 வகுப்புகளைக் கொண்ட பாடசாலை அதிபர்கள் தாமதிக்காது அனுப்பி வைக்குமாறு முகாமை ராக்கல்வி அதிகாரி கேட்டுள்ளார். (மூ)

## குண்டின் நிழலில் என்ன பரிசு?

### - சிரித்திரன் சிவா

"குண்டின் நிழலில் என்ன பரிசு?" இவ்வாறு சாகித்தியப் பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிரித்திரன் சித்திரக் கொத்து ஆசிரியர் சி. சிவஞானசுந்தரம் அவர்கள் ஸ்ரீலங்கா அரசால் அறிவிக்கப்பட்டிருந்த சாகித்தியப் பரிசை நிராகரித்துள்ளார்.

1989 ஆம் ஆண்டில் வெளிவந்த "ஏனைய துறைகள்" என்ற பகுதிக்குள் வெளிவந்த நூல்களுக்குள் இந்நூல் பரிசுக்குரியதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இந்து கலாசார அலுவல்கள் அமைச்சிலிருந்து வாமதேவன் என்பவரால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டிருப்பதையொட்டியே சிரித்திரன் ஆசிரியர் இவ்வாறு தெரிவித்தார்.

## ஆசிரியர்களுக்கு மீள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

இளைப்பாறிய கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒருவருட ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம்வழங்கப்படவுள்ளது.

தற்போதைய புதிய பாடத்திட்டத்தில் நன்கு பரிச்சயம் உள்ள ஆசிரியர்கள் தாம் கற்பித்த பாடசாலை அதிபரின் சிபார்சுடன் நாளை சனிக்கிழமைக்கிடையில் மீள் நியமனத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இவர்களுக்கு மார்ச் 1 ஆம் திகதி நியமனம் வழங்கப்பட்டு, ஓய்வூதியக் கொடுப்பனவுடன் சம்பளமும் வழங்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு பருத்தித்துறை கிழக்கு, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் மட்டுமே வெற்றிடம் உண்டு. (க)

இரு சபைகளின் கலப்புக்கூட்டத்தில்

# இலங்கை நிலவரம் குறித்து இந்தியா பெரும் கவலை

**- வெங்கட்ராமன்**

(டில்லி)

"இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இனப் பிரச்சினை அதிகரித்திருப்பது பற்றியும், அதன் காரணமாக அகதிகள் பெருமளவு தமிழகத்திற்கு வந்துள்ளது குறித்தும் இந்தியா பெரும் கவலை கொண்டுள்ளது" என இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

வரவுசெலவுத்திட்ட கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாகியபோது பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் கொண்ட கலப்புக்கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கு அமைதியான அரசியல் தீர்வு காண இந்தியா வலியுறுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் தி.மு.க. அரசாங்கம் கலைக்கப்பட்டது தொடர்பாக குறிப்பிடும் போது "இலங்கைப்போராளிகளின் சட்டவிரோதமான நடவடிக்கையும், மாநில அரசாங்கம் அதனைக் கட்டுப்படுத்தத் தவறியமையுமே இதற்குக் காரணம்" எனக்கூறினார்.

தமிழகக் கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்த மத்திய அரசாங்கம் உதவி அளிக்க முன்வந்த போதும் தி.மு.க. அரசாங்கம் அதனைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை ஜனாதிபதி கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தொடரை தேசிய முன்னணிக்கட்சி இடதுசாரிக்கட்சி பாரதீய ஜனதாகட்சி ஆகியன புறக்கணித்திருந்தன.

தமிழகத்தின் தி.மு.க. அரசாங்கம் கலைக்கப்பட்டதை எதிர்த்து தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிகட்சியும், வரவுசெலவுத் திட்டத்தில் செலவுக்கணக்குக் கோரிக்கையை மட்டும் அரசாங்கம் கொண்டுவந்ததை எதிர்த்து பாரதீய ஜனதாக் கட்சியும் புறக்கணித்தன.

## அகதிகள் உதவி நடவடிக்கைக்கு நிதிக் கட்டுப்பாடு இருக்காது

**-பீஷ்மன் நாராயணசிங்**

(திருச்சி)

வடக்குக்கிழக்கு மாகாணத்தில் இருந்து வந்த தமிழ் அகதிகளுக்கு உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ள நிதிக் கட்டுப்பாடு இருக்காது என தமிழக ஆளுநர் பீஷ்மன் நாராயண சிங் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மண்டபம் முகாமுக்கு விஜயம் செய்த ஆளுநர் அங்கு பேசும்போது இவ்வாறு தெரிவித்தார். இதுவரை தமிழக அரசு 16 1/2 கோடி ரூபாவை அகதிகளுக்கென செலவழித்துள்ளது என்றும் தமிழ் அகதிகள் அச்சமின்றி இருக்கலாம் என்றும் இது மனிதாபிமான முறையில் உள்ள பிரச்சினை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் இயல்பு நிலை மீண்டும் ஏற்படும் வரை தமிழ் அகதிகள் இங்கிருக்கலாம் என்றும் தமிழகத்தில் 250 அகதி முகாம்களில் 1,22,000 அகதிகள் தங்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

## பணமாக ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ். ஆஸ்பத்திரி வீதி கிளையில் இம்முறை வெளிக்கிழமை ஓய்வூதியகாரர்களின் மார்கழி மாதத்திற்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பணமாக வழங்கப்படும்.

(ஈ)

## அமெரிக்காவின் தோல்விகண்டு உலகம் சிரிக்கப்போகிறது

**- ஈராக் குடியரசுப் படைத் தளபதி**

(பக்தாத்)

எதிரிகளை ஈராக்கிய படைகள் முறியடிக்கும் அமெரிக்காவினதும், அதன் சார்பு நாடுகளினதும் தோல்வி கண்டு உலகம் சிரிக்கப்போகிறது என்றும் ஈராக்கின் குடியரசுப் படைகள் படையெடுத்துவரும் இராணுவத்தை முறியடிக்கும் என்றும், ஈராக்கின் குடியரசுத் படைத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் சியாத் கலிபா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எனது படைகள் நவீன ஆயுதங்கள் கொண்டிருக்கின்றன புனித இடங்களை பாதுகாத்து படையெடுப்பாளர்களை அதோறடிக்கும். எதிரிகளின் டாங்கிகள் பாலவனத்தில் எரிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தெற்கு ஈராக்கிலும் குவைத்திலும் யுத்த முனை அனுபவம் வாய்ந்த குடியரசுப் படைகள் பலமான அரண்களை அமைத்து எதிரிகளை எதிர் நோக்கியிருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

## தொண்டர் ஆசிரியர் தகைமைகள் நேரடியாகப் பரிசீலனை

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர நியமனமாக்குவது தொடர்பாக தற்போது சேவையில் உள்ள தொண்டர் ஆசிரியர்களின் தகைமைகளை கல்வி அதிகாரிகள் நேரடியாக பாடசாலைகளுக்குச் சென்று பரிசீலனை செய்யவுள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்களின் வரவு, மற்றும் கல்வித்தகைமைகள் வர்த்தமானி அறிவித்தலின்படி ஏனைய தகைமைகளை கல்விச்சேவைகள் ஆணைக்குழு, கல்வித்திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் நேரடியாகப் பாடசாலைகளுக்குச் சென்று பரிசீலனை செய்யவுள்ளனர். என்னும் காரணமாக தொண்டர் ஆசிரியர்களின் வரவு விடயத்தில் சில சலுகைகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஈ)

## பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி தடை

இராணுவ உபகரணங்கள், அது தொடர்பான உதிரிப் பாகங்கள், மற்றும் முக்கியமான பொருள்களையும் பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்வதை ஐந்து கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகள் ரத்துச்செய்துள்ளன.

## சரணாகதியை வற்புறுத்தினால் போர் நீண்டகாலம் நீடிக்கும்

**- கார்ட்டர்**

(நியூயோர்க்)

ஈராக்குடன், சமாதானப் பேச்சுக்குப் பதிலாக முழு சரணாகதியை கூட்டணி நாடுகள் தொடர்ந்து வற்புறுத்தி வந்தால் நீண்டகால போரில் ஈடுபட வேண்டியிருக்குமென முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

டைம் சஞ்சிகையில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் "யுத்த நிறுத்தத்தை நாம் நிராகரிக்கக் கூடாது. சமாதானப் பேச்சுக்குப் பதில் முழு சரணாகதியை வற்புறுத்தி வந்தால் நீண்ட அழிவுக்கே அது வழிசெய்யும். கூட்டணியில் பிளவும், மத்திய கிழக்கில் ஸ்திரமின்மையும் ஏற்படக்கூடும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1979 ஆம் ஆண்டு எகிப்துக்கும், இஸ்ரேலுக்குமிடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட கார்ட்டர் உதவிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 36 ஆம் நாள் போர்

★ ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனின் பதிலை பெற்றுக்கொண்டு வெளியுறவுத்துறை அமைச்சர் தாரிக் அசீஸ் விரைவில் மொஸ்கோ செல்வாரென பாக்தாத் வானொலி அறிவித்தது.

★ கிரெம்ளின் சமாதான முயற்சிக்குப் பாக்தாத் விரைந்து பதில் தெரிவிக்க வேண்டுமென சோவியத்யூனியன் கேட்டுக்கொண்டிருக்கின்றது. ஈராக்கின் பதில் ஆக்கபூர்வமானதாகவும், தெளிவானதாகவும் இருக்கவேண்டுமெனவும் அது கேட்டுள்ளது.

★ குவைத்தில் இருந்து ஈராக் விலகத் தொடங்க வேண்டும் அல்லது தரைப்படைத் தாக்குதலை சந்திக்க தயாராக இருக்க வேண்டும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

★ ஈராக்கை அழிப்பதைத்தவிர வேறு எதிலும் அமெரிக்கா அக்கறை காட்டவில்லையென ஈராக் நம்புவதாக ஐ.நா. சபைக்கான ஈராக்கிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

★ கிரெம்ளினின் சமாதான திட்டம் குறைபாடு உடையது என பிரித்தானியா அறிவித்துள்ளது.

★ சோவியத் யூனியனின் திட்டத்தை முற்றிலுமாக நிராகரித்துவிடக் கூடாது என்று ஈரானிய ஜனாதிபதி ரப்சன்ஜானி, ஐ.நா. சபைத் தலைமைச் செயலாளர் பெரஸ் டி குவயர், ஜேர்மனிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜென்ஷர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

★ சீனா, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் சோவியத் யூனியன் முன்வைத்துள்ள சமாதானத் திட்டத்தை வரவேற்றுள்ளன.

★ ஈராக்கின் புரட்சிகர கட்டளைச்சபை சோவியத் முன்வைத்துள்ள சமாதானத் திட்டம் தொடர்பாக முடிவு ஒன்றை மேற்கொண்டிருப்பதாகவும், இம்முடிவை வெளியுறவு அமைச்சர் தாரிக் அசீஸ் சோவியத் அதிபரிடம் நேரில் தெரிவிக்க இருப்பதாகவும் ஈராக் வானொலி அறிவித்துள்ளது.

★ வளைகுடாப் போருக்கு சமாதானத் தீர்வுகாண ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தினை அமெரிக்கா நழுவவிட்டுவிடக் கூடாது என்று சீனா கோரியுள்ளது.

★ அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் ஈராக்கை அழிக்க முயல்வதாக ஐந்து வடஆபிரிக்க நாடுகள் கூட்டாக கூறியுள்ளன.

★ அமெரிக்கா, பிரிட்டன், எகிப்து, இஸ்ரேல், துருக்கி ஆகிய நாடுகள் தேசிய நலன்களின் பெயரால் மனித உரிமைகளை மீறி வருவதாக அம்னெஸ்ரி இன்டர்நேஷனல் குற்றம் சாட்டியுள்ளது. வளைகுடாப் போருக்கு எதிராகக் குரல் கொடுக்கும் பலர் கைது செய்யப்படுவதாக அது கண்டனம் செய்துள்ளது.

★ வளைகுடாப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஈராக்கிற்கு உதவும் முகமாக சுமார் ஒருகோடிரூபா பெறுமதியுடைய மருந்துப் பொருள்களை இந்தியா அனுப்பிவைக்கவுள்ளது.

## கலந்துரையாடல்

ஆனையிறவு கல்லுண்டாய் செம்மணி உப்புக்கூட்டுத்தாபன வேலைத்திட்டங்களில் பணியாற்றிய தொழில்நுட்பவியலாளர், உற்பத்தி முகாமையாளர்களுக்கான கலந்து

## இணைப்புக் கூட்டங்கள்

கீரிமலை, உரும்பராய் ஆகிய பகுதிகளின் கமநல பிரதேச கிராமிய உற்பத்தி

